பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

19 09 2024 Thursday 6 30 Pm

வணக்கம் – மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- விவசாயிகளின் நலனுக்காக பிரதமரின் நிதியுதவி திட்டம், உணவு பதப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- வேளாண்துறைக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் புதிய நிகழ்ச்சி தொடங்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.
- 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' திட்டம் நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்படும் குரூப்-4 பணியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.
- ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் Naiktha Bains இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் உணவு தேவையை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் உலக உணவு இந்தியா மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரதமரின் காணொலிப் பதிவில், கடந்த பத்தாண்டுகளாக உணவு பதப்படுத்துதல் துறையில் பல்வேறு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கான பிரதமரின் நிதியுதவி திட்டம், உணவு பதப்படுத்துதலுக்கான குறுந்தொழில் நிறுவனங்கள் உருவாக்கம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம், வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட்டதாகவும், மகளிர் தொழில்முனைவோர் ஊக்குவிக்கப்பட்டதாகவும், நவீன கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மகளிரின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும், மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மூன்றாவது முறையாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற முதல் 100 நாட்களின் சாதனைகளை விளக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கூட்டுறவுத் துறையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

இயற்கை விவசாயத்தை வலுபடுத்தவும், அதன்மூலம் மண்வளத்தை மேம்படுத்தவும் மத்திய அரசு இரண்டாம் கட்ட வெண்மைப்புரட்சியை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

வேளாண்துறைக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் புதிய நிகழ்ச்சி தொடங்கப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு, தொடர்ந்து மூன்றாவது முறையாக பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், வேளாண் துறையின் முன்னேற்றங்கள் குறித்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விவசாயிகளுக்கான பிரதமரின் நிதியுதவி திட்டத்தின் கீழ், 21 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும், இத்திட்டத்தில் புதிதாக 25 லட்சம் விவசாயிகள் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டம் நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பான பரிந்துரைகளை மத்திய அமைச்சரவை நேற்று ஏற்றுக் கொண்ட நிலையில், முதலமைச்சர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இந்தியாவின் பன்முக தேர்தல் நடைமுறையை சிதைக்கும் வகையில் இது அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாநில அளவிலான பிரச்சினைகள், தேர்தல் சுழற்சி முறை மற்றும் நிர்வாகத்தில் வேறுபாட்டை ஏற்படுத்தக்கூடிய இத்திட்டம் ஜனநாயகத்தில் ஒருபோதும் நடைமுறைப்படுத்த இயலாதது என்றும் முதலமைச்சர் அதில் கூறியுள்ளார்.

இதனிடையே, கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன், ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம், மக்கள் நலனுக்கானது என்றும், அவசர கதியில் எடுக்கப்பட்ட முடிவல்ல என்றும் கூறியுள்ளார்.

>>>>><<<<<

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே நேரிட்ட பட்டாசு ஆலை வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார், ஒருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

காயமடைந்தவருக்கு 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - TNPSC மூலம் நிரப்பப்படும் குரூப்-4 பணியிடங்களின் எண்ணிக்கையை 15 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாநிலத்தில் இரண்டு லட்சம் குரூப்-4 பணியிடங்கள் காலியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சுயதொழில் பயிற்சி நிறுவனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக அதன் இயக்குநர் திரு. அரவிந்த்குமார் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - அரவிந்த்குமார் 36 செகண்ட்ஸ்)

இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்றதன் மூலம், தங்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 36 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பாதுகாப்புத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், பாதுகாப்பு அமைச்சகத்தின் Sparsh என்ற இணையதளத்தில் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் தென்மண்டல கணக்கு தணிக்கை அதிகாரி திரு. T. Jayaseelan கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, எமது செய்தி ஆசிரியர் அவருடன் நடத்திய நேர்காணல் நிகழ்ச்சி, நாளை காலை மணி 10.02 முதல் 10.32 வரை சென்னை ஆகாஷவாணியின் பிரதான அலைவரிசை மற்றும் பண்பலை 101.4 அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒருசில இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 43 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் ‘பெண் குழந்தைகளை காப்போம், அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்’ திட்டம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் மத்திய-மாநில அரசுகளின் சார்பில் வரும் நவம்பர் 4 மற்றும் 5ஆம் தேதிகளில் மரவள்ளி கருத்தரங்கு மற்றும் உணவுத் திருவிழா நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின், மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலந்தின் Naiktha Bains இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 7-5 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Aoi Ito – Sayaka Ishii இணையை வென்றது.

>>>>><<<<<

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 339 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற பங்களாதேஷ் அணிபந்து வீச தீர்மானித்ததை அடுத்து, பேட் செய்த தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் 56 ரன்னும், ரிஷப்பந்த் 39 ரன்னும் எடுத்தனர்.

அஸ்வின் 102 ரன்னுடனும் ஜடேஜா 86 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

**>>>>>END<<<<<**